***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.231/2021 – P.W. 7 (LW15)***

| | |
|---|---|
| *Name* | பசுபதி காவல் ஆய்வாளர்<br>தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையம். |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *47* |

**எதிரி ஆஜர்**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.06.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

**இவ்வழக்கின் சாட்சி தற்போது தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதால் காணொளி மூலம் சாட்சியம் அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டு வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு தற்போது தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து Remote Co-ordinator சி. மணிகண்டன், Assistant Programmer Principal District Court, Thanjavur அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டு அவரது முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

கடந்த 13.05.2019 ம் வருடம் திருவாரூர் மாவட்டம், வடுவூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்றையதினம் காலை 09.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மன்னார்குடி தாலுக்கா காரக்கோட்டை அஞ்சல், செருமங்கலம் உடையார் தெருவை சேர்ந்த நடேசன் மகன் கருப்பையன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.110/2019 ச/பி 304(A) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல்

அறிக்கையுடன் வாதியின் புகாருடன் இணைத்து மன்னார்குடி JM.NO.1 நீதிமனற்த்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 13.05.2019 ம் தேதியன்று 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தர்மராஜ் மற்றும் சுபாஷ் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன். (**பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இந்த வழக்கில் விபத்துக்குள்ளாகி காயம்பட்டு இறந்துபோன ராஜவேல் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பிரேத விசாரணைக்கு உட்படுத்தினேன். சாட்சிகளையும் விசாரித்தேன். இதற்கான அறிக்கையும் தயார் செய்தேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிரேதத்தினை சடல கூராய்விற்காக மருத்துவர் வசம் ஒப்படைத்தேன் சடலகூராய்விற்கு பின்னிட்டு உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன். சாட்சிகள் கருப்பையன், கணேசன், முருகையன், முருகேசன், ராசு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு சாட்சிகள் கோமதி, சுஷ்மிதா, மனோகர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.05.2019 ம் தேதியன்று 15.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான வழக்கின் எதிரி பார்த்தசாரதியை குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து பின்பு அழைக்கும் போது மன்னார்குடி JM.NO.I மன்னார்குடியில் ஆஜராக உரிய அறிவுரை கொடுத்து தக்க 2 நபர் ஜாமினில் விடுவித்தேன்.

5. 16.05.2019 ம் தேதியன்று வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN50-AW-8578 என்ற எண்ணுள்ள maruthi swift desire மற்றும் எதிரியின் வாகனமான TN92-3973 Tata maxi cab நான்கு சக்கர வாகனத்தினை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஆய்விற்காக உட்படுத்தினேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் பெற்று தாக்கல் செய்தேன். (**மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் அ.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 30.05.2019 ம் தேதியன்று TN50-V-1805 TVS XL heavy duty இருச்சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். **மோட்டார் வாகன ஆய்வாளர்**

**அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மோட்டார் வாகன ஆய்வாளரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

05.02.2020 ம் தேதியன்று சடல கூராய்வு செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சடல கூராய்வு அறிக்கையும் பெற்று தாக்கல் செய்தேன். (ஏற்கெனவே **சடல கூராய்வு அறிக்கை அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**). இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பிரேத பரிசோதனைக்கு பின் உறவினர் வசம் ஒப்படைத்த நிலைய காவலர் 1447 பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இ.தச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் முதல் விசாரணை பதிவு செய்ததில் இருந்து இந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது வரை நான் தான் செய்தேன் என்றால் சரிதான். இறந்து போன நபருக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமமோ இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடோ இல்லை என்றால் சரிதான். வரைபடத்தின் படி சம்பவ இடமானது S வடிவ வளைவு என்றால் இல்லை. வரைபடத்தின் படி சம்பவ இடமானது s வளைவில் உள்ளதாக குறிப்பிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கில் புகார்தாரர் கருப்பையன், கணேசன் ஆகியோர்கள் உறவினர்கள் என்றும் புஷ்பவள்ளி இறந்து போன நபருக்கு மனைவி என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு சம்பவ இடத்தில் வீடு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் குறுக்கு சந்து உள்ளது என்றாலும், அந்த இடத்தில் சந்து வழியாக வந்து தான் இந்த விபத்து என்றாலும் சரிதான். வழக்கு ஆவணங்களின் படி வழக்கு இல்லை என்றும், இந்த விபத்தானது வளைவான பகுதி இறந்துபோன நபர் குறுக்கு சந்தில் இருந்து அஜாக்கிரதையாக கவனக்குறைவாக சாலை வதிகளை பின்பற்றாமல் ரோட்டின் உள்ளே புகுந்து அருகருகே வந்த இரண்டு வாகனங்களின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும், இந்த விபத்தானது இந்த எதிரியின் செயலால் ஏற்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபருக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்ற மனிதாபிமான எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், அதனால் தான் சம்பவ இடத்தில் உள்ளவர்களை

சாட்சிகளாக விசாரிக்காமல் இறந்துபோன நபர்களின் உறவினர்களை சாட்சிகளாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.